REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The: "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 18உ வெள்ளி (4—10—57) ★ ★ வெளியீடு: புரட்டாசி 19உ சனி (5—10—57) [இதழ் 96

என்னதான் முயற்சி செய்தாலும் பல ஆண்டுகளாகுமாம்!

நியூயார்க், அக். 4—

"என்னதான் முயற்சி செய்தாலும் இந்திய மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்குப் பல ஆண்டுகளாகும். இந்திய மக்களின் தொகை கணிசமாகப் பெருகிக்கொண்டே வருகிறது. மற்ற நாடுகளுடன் போட்டியிட முடியாவிட்டாலும், சரி சமமான அந்தஸ்தைப்பெற இரட்டிப்பு மடங்கு வேகமாக ஓட வேண்டியுள்ளது" என்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

சிங்களவர் இன-மொழி வெறி உச்சம் பெறுகிறது

தமிழருக்கு எதிராகப் 'பாத யாத்திரை'யாம்!

தமிழுக்கு சிறுபான்மையினர் மொழி என்ற மதிப்புக்கூடத் தரலாகாதாம்

கொழும்பு, அக். 4—

இலங்கையில் தமிழருக்கு எதிராக சிங்களவர், இன—மொழி வெறிகொண்டு நடத்திவரும் தொடர்ந்த ஆர்ப்பாட்டங்கள் இப்போது உச்சம் பெற்று வருகின்றன.

தமிழ் மொழிக்கு தேசிய சிறுபான்மையினரின் மொழி என்ற அந்தஸ்தினைத் தரும் வகையில், தமிழரசுக் கட்சியுடன் பிரதமர் பண்டாரநாயகா மேற்கொண்டுள்ள ஒப்பந்தம், 'சிங்களத்தை மட்டுமே தேசிய மொழியாக்குவோம்' என்ற சர்க்காரின் கடந்த கால உறுதிமொழிக்கு விரோதமானது என்று கூறி, இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து, முன்னாள் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில் சிங்களவர் திரண்டிருக்கின்றனர்.

இவர்கள் நேற்று கொழும்பிலிருந்து கண்டிக்கு 'பாத யாத்திரை'யாகப் புறப்பட்டிருக்கின்றனர்; வழிநெடுகிலும், 'சிறுபான்மையினரான தமிழருக்கு எந்த வித உரிமைகளும் வழங்கக்கூடாது' என்ற வகையில், வெறிகொண்டு கூச்சலிட்டுச் செல்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

இவர்கள் கொழும்பு நகர எல்லையைத் தாண்டியதும், ஊர்வலத்தின்மீது யாரோ சிலர் கல்லெறிந்ததாகவும், அதனைத் தொடர்ந்து குழப்பம் ஏற்பட்டதாகவும், சம்பவத்தின்போது ஒரு போலீசார் உட்பட 10 பேர் காயமுற்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஊர்வலமாகச் செல்லும் இவர்களுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரான ஜே. ஆர். ஜெயவர்த்தனே தலைமை தாங்குகிறார் என்றும், புத்த சந்நியாசிகளும் ஊர்வலத்தில் அணிவகுத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

72 மைல் நடந்து கண்டி சென்று, அங்குள்ள புத்த கோவிலுக்கு எதிரில் அக்டோபர் 8-ந் தேதியன்று கூட்டம் நடத்தப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்களவர்கள், தமிழருக்கு எதிராகக்கொண்டுள்ள இன—மொழிவெறி, நாளும் வளர்ந்து வருவதையே இந்தப் போக்குக் காட்டுவதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நியாயம்தானும்!

புதுடில்லி, அக். 3—

கடந்த ஜூலை 31-ந் தேதியன்று இங்கு, நகர சுத்தித் தொழிலாளர் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது 'அவசியமானதே; நியாயமானதே; அதீதமானதல்ல' என்று, அதுகுறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட உ. பி. மாநில செஷன்ஸ் நீதிபதிகளுள் ஒருவரான ஜே. டி. சர்மா என்பார் விசாரணைக்குப்பிறகு கூறியுள்ளார்.

வெள்ளையரின் அட்டகாசம் நீடிக்கிறது

நிறவெறியால் நீக்ரோவர் துன்புறுத்தப்படுகின்றனர்

லிட்டில்ராக், அக். 3—

அடித்துத் துன்புறுத்தி, அவமானப்படுத்துவதன் மூலம், நீக்ரோவ மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்லவேண்டும் என்ற ஆசையையே மறந்துவிடுமாறு செய்யவேண்டும் என்பதே தங்கள் நோக்கம் என்று, வெள்ளை மாணவர்கள் கூறுகின்றனராம்!

இந்த வெள்ளையர்கள் 50 பேர் சேர்ந்துகொண்டு நேற்றுப் பள்ளிக்கூடம் வந்த இரு நீக்ரோவ மாணவர்களை துரத்தித் துரத்திச் சென்று பள்ளிக்கூட எல்லைக்குள் வைத்துத் தாக்கினராம்; அங்கு காவல் புரிந்த போலீசார் பேசாமல் இருந்துவிட்டனராம்; நல்லவேளையாக அங்கு வந்த ஆசிரியர் ஒருவர், நீக்ரோவ மாணவர்களைக் காப்பாற்றினாராம்!

மேலும் தொடர்ந்து பள்ளிக்கூடம் வந்த நீக்ரோவ மாணவர்களை, வெள்ளை மாணவர்கள் கூடிக்கொண்டு கூச்சல் எழுப்பிக் கலாட்டா செய்தனராம்!

'ஆபத்தை' விலைக்கு வாங்காதீர்!

நாகாக்கத் தவறும் அமைச்சர்களுக்கு அண்ணா எச்சரிக்கை

22—9—27-ல் திருவண்ணாமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டில் பேசுகையில் அண்ணா அவர்கள், மக்கள் மன்றத்தையும், சட்ட மன்றத்தையும் ஒப்பிட்டு, மக்கள் மன்றத்திலே நமதியக்கத்துக்கு இருக்கிற மதிப்பையும், செல்வாக்கையும், சட்ட மன்றத்திலே அமைச்சர்களுக்கு அளிக்கப்படுகிற சில வசதிகள் எதிர்க்கட்சியினருக்குக் கிடைக்காத காரணத்தாலேயே நம்மைப்பற்றி சட்டசபைக்கு வெளியிலே அமைச்சர்கள் தூற்றித்திரிய முடிகிறது என்பதையும் எடுத்துக் காட்டினார்கள்; அவை இங்கு தரப்படுகிறது (அவரது பேச்சின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது) :—

"சட்ட மன்றத்திலே நாங்கள் எப்படிப் பணியாற்றுகின்றோம் என்பதைச் சொல்ல வேண்டியவர்கள் நீங்கள்—கேட்டுக்கொள்ள வேண்டியவர்கள் நாங்கள். செய்ததைச் சொல்லப்போகின்றோம, உங்களிடத்தில்; அதற்குத் தீர்ப்பளிக்க இருக்கின்றவர்கள் நீங்கள்; மந்திரிகள் அல்ல அதற்குத் தகுதி படைத்தவர்கள் — அவர்கள் அல்ல அதற்கு உரிமை படைத்தவர்கள்!

"இலட்சியங்களை, தி. மு. கழகத்தார், சட்டசபைக்குச் சென்ற பிறகு விட்டுவிட்டார்கள் என்றால், மாணிக்கவேலர் போல்—இராமசாமி படையாச்சிபோல் ஆகிவிட்டார்களென்றால், எங்களை நீங்கள் கேட்கவேண்டும்; அல்லது, சட்டசபைக்குச் சென்று, இராமசாமி படையாச்சியைப்போல் அமைச்சர் வேலை கிடைக்காத காரணத்தாலே வாய் மூடி மௌனியாகி இருப்பதைப் போல், நம்முடைய கழகத் தோழர்கள் வாய்மூடி மௌனியாகி இருக்கின்றார்களென்றால் நீங்கள் கேட்கலாம். இன்றையத் தினம் எங்கள்பேரிலே சாட்டப்படுகின்ற குற்றமே என்ன? 'இவர்கள் எதற்கெடுத்தாலும் வடக்கு-தெற்கு என்று பேசுகின்றார்கள்; வேறெதுவும் பேசுவதில்லை' என்பதுதான்; அந்தப் பேச்சைப் பற்றி—உங்களுக்கு சட்டசபையைப்பற்றி ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகின்றேன்.

"எங்களுக்கு இங்கே இருக்கின்ற நிலைமைக்கும், சட்டசபையிலே இருக்கின்ற நிலைமைக்கும் இருக்கிற வித்தியாசத்தை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இங்கே நாங்களெல்லாம் எப்படிப் பழக்கப்பட்டிருக்கின்றோமென்றால், 'இன்னும் கொஞ்ச நேரம் பேசுங்கள்—அண்ணா நீ இரண்டு மணி நேரம் பேசவேண்டும்—கருணாநிதி ஒரு மணி நேரமாவது பேசவேண்டும்—சம்பத்து வெகு நாளைக்குப் பிறகு வந்திருக்கிறார்; இரண்டு மணி நேரமாவது பேசவேண்டும்'—என்று நீங்கள் எங்களை அதிகம் நேரம் பேசச் சொல்லுகிறீர்கள். நாங்கள் உங்களிடத்தில், 'அவர் சொல்லிவிட்டார்—இவர் சொல்லிவிட்டார்; இவர் இன்னும் சொல்லப் போகிறார்; இடையிலே இருக்கிற நான் இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்'—என்று பேசிப் பழக்கப் பட்டவர்கள்.

"உதாரணத்துக்குச் சொல்லுவேன்—'சாப்பாட்டுக்கு வாருங்கள், வாருங்கள்' என்று நாலு பேர் கைப்பிடித்து அழைக்க அழைக்க, பிகுவோடு உள்ளே போகின்ற விருந்தாளிகளைப் போல் நாங்கள், நாட்டிலே நடமாடிக்கொண்டிருப்பவர்கள்; சட்டசபையிலே எப்படியென்றால், 'இதற்குமேலே பேசாதே; 5 நிமிடத்திற்குமேல் பேசாதே; 10 நிமிடத்திற்குமேல் பேசாதே' என்பது விதியாகும். உங்களிடத்தில் உண்மையைச் சொல்லுகிறேன்—முதலிலே அது எனக்குக் கொஞ்சம் வெட்கமாகக்கூட இருந்தது—'நாமென்ன, இவர்களைப் போய் 10 நிமிடம் பேச வேண்டுமென்று கேட்பது? நம்மையல்லவா நாட்டு மக்கள், இந்த 15 ஆண்டுக்காலமாகக் கேட்கிறார்கள்? நாமல்லவா மக்களிடத்திலே போய், 'இல்லை இல்லை; தொண்டை கட்டியிருக்கிறது; தலைவலியாயிருக்கிறது' என்று சொன்னோம்; 'பரவாயில்லை அண்ணாத்துரை! நீ மக்கள் பேசச் சொன்ன நேரத்தில், பேசாமல் ஏமாற்றியதற்கு நீ இப்பொழுது இவர்களிடத்திலே கேட்கிறாய்' என்று கூட என்னுடைய உள்ளம் எனக்கு உறுத்திற்று; வெட்கப்பட்டேன். இந்த வெட்கத்தையும் வேதனையையும் தாங்கிக்கொண்டு அவர்கள் தருகின்ற 10 நிமிடத்திலேயோ, 15 நிமிடத்திலேயோ—கெடிகாரத்தையும் பார்த்துக் கொண்டு, சபாநாயகரையும் பார்த்துக் கொண்டு, வைத்திருக்கிற குறிப்பையும் பார்த்துக்கொண்டு நாங்கள் பேசுகிறோம்; இது எங்களுக்கு இருக்கிற நிலைமை.

"நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு இருக்கின்ற வசதி என்னவென்றால், நாங்கள் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பார்; அதற்குப் பிறகு அவர் பேச ஆரம்பித்தால்—எங்களுக்கெல்லாம் சட்டமன்றத் தலைவர், 'கருணாநிதிக்கு 5 நிமிடம்; அன்பழகனுக்கு 10 நிமிடம்; அண்ணாதுரைக்கு 20 நிமிடம்' என்று நேரத்தை ஒதுக்கிவிடுவார் — அமைச்சர் பேச ஆரம்பிக்கிறார் என்றால், அமைச்சரைப் பார்த்து சபாநாயகர் கேட்பார்—'அமைச்சர் அவர்களே! எவ்வளவு நேரம் பேசப்போகிறீர்கள்?' என்று; உடனே அமைச்சர் பதில் சொல்லுவார்—'ஒரு மணியிலிருந்து ஒன்றரை மணிநேரம் வரையிலே பேசலாமென்றிருக்கிறேன்' — என்று; ஆக, நாங்கள் 5 நிமிடம், 10 நிமிடம் பேசுகின்ற பேச்சுக்கு, காலவரையறையில்லாமல் பேசு

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவிற்கு நிதி உதவி

அமெரிக்க சர்க்கார் தனிக் கமிட்டி அமைக்கிறதாம்

வாஷிங்டன், அக். 3—

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களைப் பரிசீலித்து, அவற்றிற்கு அமெரிக்கா எத்தனை தூரம் உதவலாம் எனச் சிபாரிசு செய்வதற்காக அரசாங்க இலாகா ஒரு தனிக் கமிட்டியை நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அண்மையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, அரசாங்க மந்திரி டல்லஸ், மற்றும் உயர்தர அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவை ஆராயும் பொருட்டு, இந்தக் குழுவின் முதற்கூட்டம் இந்த வாரம் நடைபெறுமாம்.

இந்தியா, இரண்டாம் திட்டத்தில் அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை 140 கோடி டாலர் என்றும், இதில் 60 கோடி டாலர் வரை அமெரிக்காவிலிருந்து பெற விழைவதாகவும் குறிப்பாகத் தெரிவித்திருக்கிறதாம்.

★

'கடன்தான்; உதவி அல்ல'

நியூயார்க், அக். 3—

"நாங்கள் அமெரிக்காவிலிருந்து கடன்தான் எதிர்பார்க்கிறோமே தவிர, உதவி அல்ல; நாங்கள் கடன் கேட்பது எங்கள் தேவைகளுக்காக; எங்களால் வாங்குகிற கடனைத் திருப்பித்தர முடியும் என்ற நிலை, எங்கள் கோரிக்கையை நியாயப்படுத்தும்"

என்று, இங்கு வெளிநாட்டு உறவுக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில், நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறாராம்!

சென்னையில் வேலை-நேர நஷ்டம்

தொழில் தகராறின் விளைவு

புதுடில்லி, அக். 3—

1957 ஜூலைத் திங்களில், இந்தியாவில், தொழில் தகராறுகள் காரணமாக முந்திய திங்களைவிட வேலை நேர நஷ்டம் கூடுதலாகியுள்ளது என்று இந்திய அரசாங்கம் கணக்கிட்டுள்ளது.

இந்தத் திங்கள் 7,15,939 நபர்—நாட்கள் நஷ்டம் என்றும், முந்திய திங்களில் 7,13,892 நபர்—நாட்கள் நஷ்டம் என்றும் புள்ளிவிவரங்கள் தரப்பட்டுள்ளன.

எல்லா மாநிலங்களையும்விட சென்னையில்தான் அதிக நேர நஷ்டம் (2,22,852) என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—10—57 வெள்ளி

இவர்கள்தானே, ஆளவந்தார்கள்!

'பாதிரி சோஷலிச'மாக ஆவடியில் பிறந்து, 'சோஷலிச வடிவ சமுதாய'மாக அமிர்த சரசில் உருமாறிய காங்கிரஸ் ஆளவந்தார்களின் இலட்சியம், அதற்கு அவர்கள் தந்த விசித்திரமான வியாக்கியானங்கள் மூலமும், கடைப்பிடித்துவரும் விநோதமான நடைமுறைகள் மூலமும், உண்மையான சமதிதியில் நாட்டம் கொண்டவர்களது பெருநகைப்பிற்கு சுவையான தீனியாகியுள்ளது.

டெல்லிப் பெரியவர்கள் தங்களது இரண்டுங்கெட்டான் நிலைக்கு ஒரு கவர்ச்சிகரமான பெயர் சூட்ட விழைந்தனர். விளைவு, சோஷலிச வடிவமான சமூக அமைப்பு என்ற பெயர் பிறந்தது. குழப்பமும் முரண்பாடும் மலிந்த விளக்கங்கள், இந்தப் பெயருக்குத் தரப்பட்டன. நடைமுறைகளோ, வெட்கக்கேடானவை.

'சோஷலிச வடிவ சமூக அமைப்பு' என்ற இலட்சியத்திற்குக் கடைசியாகத் தரப்பட்டிருக்கும் இருவேறு முரண்பட்ட விளக்கங்கள், இந்த நாட்டு மக்களின் கூரிய கவனத்திற்கு உரியனவாகும். 'தொழில்களை இனி தேசியமயமாக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை' என்று, இரண்டாம் திட்டத்திற்கு உயிர்தேடி அமெரிக்கா சென்றுள்ள நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியர் தெரிவித்திருக்கிறார். அதேபோது, அவரளவு பொறுப்புடைய பதவியிலமர்ந்திருக்கும் என். வி. காட்கில், 'பாங்கிகளை தேசியமயமாக்க வேண்டும்' என்று பேசியிருக்கிறார்.

அரசாங்கப் பாங்கியின் உதவி நிர்வாகத் தலைவர், 'தேசிய மயமாக்கவேண்டும்' என்கிறார்; 'இனி தேசிய மயமாக்கும் நோக்கமே இல்லை' என்கிறார், டி. டி. கிருஷ்ணமாச்சாரி! இருவரும், சோஷலிச வடிவமான சமூக அமைப்பினை ஏற்றுக்கொண்டு, அதன் உருவாக்கத்தில் பங்குபெற்றிருக்கும் பெரியவர்கள்தான். இவர்களது பேச்சுக்கள் நேர்பகையானவையாயிருப்பதற்கு, இவர்களைவிடப் பெரியவர்களாயிருப்பவர்களாவது விளக்கம் தந்தாகவேண்டும்.

இத்தகு குழப்பமானதும், முரண்பட்டதுமான விளக்கங்கள் தரப்பட்டுவரும் சோஷலிச வடிவமான சமூக அமைப்பினை உருவாக்குவதில், பெரியவர்களால் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளும் நேரானவையல்ல.

'இருக்கிற ஏழ்மையைப் பங்கிட்டுக்கொள்வதல்ல சோஷலிசம்; செல்வத்தைப் பெருக்குவது; உற்பத்தியை அதிகரிப்பதுதான்' என்பதும், காங்கிரஸ் ஆளவந்தார்கள் தங்கள் இலட்சியத்திற்குத் தந்திருக்கும் விளக்கங்களுள் ஒன்றாகும். இதற்கு இணக்கமான வகையிலேனும் நடைமுறை இருக்கிறதா என்றால், இல்லை.

தொழிற் தகராறுகள் காரணமாக, மாதந்தோறும் ஆயிரக்கணக்கான நபர்-நாட்கள் நஷ்டமாகி வருகின்றன. கடந்த ஜூலைத் திங்களில் மட்டும் 7,15,939 நபர்-நாட்கள் நஷ்டமாயின என்றும், இது ஜூன் திங்களைவிட 2,047 நபர்-நாட்கள் அதிக நஷ்டம் என்றும், பொதுவாக சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டு நபர்-நாட்கள் நஷ்டம் சராசரியாக 20 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது என்றும் ஒரு கணக்கு கிடைத்திருக்கிறது.

இந்த நிலைக்குக் காரணம் என்ன?

அசல் பிற்போக்குவாதிகளான இந்தக் காங்கிரஸ் ஆளவந்தார்கள், பெரும் தியாகங்களுக்குப் பிறகு தொழிலாளர்கள் தேடிப் பெற்ற உரிமைகளைக் காப்பாற்றுவதற்கென, அரைகுறை மனதுடன்தான் என்றாலும், சில பல சட்டங்களை நிறைவேற்றிவைத்துள்ளனர். இந்தச் சட்டங்களை அமுல் செய்வதற்கென பெரும் செலவில் தொழிலாளர் நல அதிகாரிகள், தொழில் நீதி மன்றங்கள் என்ற ஏற்பாடுகளும் இருக்கின்றன; ஆனால் இவை எல்லாம்கூட, தொழிலாளருக்கு நீதி வழங்கவும், அவர்களது உரிமைகளைப் பெற்றுத் தரவும் உதவுகின்றனவா என்றால், இல்லை.

சட்டங்கள் எல்லாம் ஏட்டளவில்தான்; நலன்களைப் பெறுவதற்காக, உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்காக ஒவ்வொரு முறையும் தொழிலாளர்கள் நேரடி நடவடிக்கையில்தான் ஈடுபட வேண்டியிருக்கிறது. அப்படி ஈடுபடும்போது மட்டும், எப்போதும் வாய் பிளந்து நிற்கும் அடக்குமுறை சட்டங்கள் எழுந்து நடமாடுகின்றன; தொழிலாளர் மீது ஏவப்படுகின்றன!

அடக்குமுறைச் சட்டங்களுக்கு மட்டும் நேரம் தப்பாமல் தீனிபோட்டு ஊட்டி வளர்த்து, ஊர்வலம் நடத்தி மகிழும் காங்கிரஸ் ஆளவந்தார்கள், தொழிலாளர்களின் நலன்களுக்கான சில பல சட்டங்களைக்கூட அமுல் செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர். இதன் விளைவு, நாள்தோறும் தொழிற் தகராறுகள் வளருகின்றன; நபர்-நாட்கள் நஷ்டம் பெருகுகிறது.

உற்பத்திப் பெருக்கிற்கு மிகக் கொடிய சத்துருவான இந்தப் போக்கினை நடைமுறையாக வைத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் ஆளவந்தார்கள், உற்பத்தி பெருக வேண்டுமென கோபுர உச்சியிலிருந்து கூவினால் மட்டும் போதுமா?

'இலட்சியம்' என்று பிரகடனப்படுத்தப் பட்டிருக்கும் சோஷலிச வடிவ சமூக அமைப்பு என்பதே பெருங் குழப்பமானது; அதற்கு, நாளும் தரப்படும் விளக்கங்களும் முரண்பட்டவை; செயல்படும் நடைமுறையும் எதிர்பார்ப்பதற்கு நேர்விரோதமானது.

என் செய்வது? இவர்கள் தானே இன்றைய ஆளவந்தார்கள்!

அமைதியான சமுதாயம்

'நிறுவ இயலாததேன்?'

விநோபா கூறும் காரணம்

மைசூர், செப். 30—

"பெண்களுக்கு ஆண்கள் அணிவிக்கும் வளைகள் அவர்களை அடிமையாக்கும் - கட்டுப்படுத்தும் தளைகளாகும்; வீட்டிற்குள்ளேயே அவர்களை அடைபட்டுக்கிடக்கச் செய்யும் கைவிலங்குகளாகும்; பெண்களைக் கட்டுப்படுத்தும் ஆண்களின் தளைகளிலிருந்து பெண்கள் முழுமையிலும் விடுதலை பெறுவிடில், அமைதியான சமுதாயத்தை நிறுவவே முடியாது" என்று, வழிபாட்டுக் கூட்டமொன்றில் விநோபாவே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்திக்காக ஆங்கிலத்தை நீக்கி அழிவைத் தேடிக் கொள்ளாதீர்'

இந்தி திணிப்பாளரை எச்சரிக்கிறார் முன்னாள் கவர்னர் முன்ஷி

சூரத், செப். 30—

"இந்தியா முழுவதிலும் ஆங்கில மொழி பெற்றிருக்கும் இடத்தைக் கைப்பற்றும் அளவுக்கு வேறொரு மொழி வளர்ச்சியும், தகுதியும் அடையும்வரை, ஆங்கிலத்தைப் புறக்கணிக்கவோ, வெறுத்து ஒதுக்குவதோ ஆகாது"

என்று, முன்னாள் உத்தரப் பிரதேச கவர்னர் கே. எம். முன்ஷி கருத்துத் தெரிவித்துள்ளார்.

சூரத் ரோட்டரி சங்கக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"கூடியவிரைவில் ஆங்கிலத்தை இந்த நாட்டிலிருந்து அகற்றிவிடவேண்டும் என எண்ணுவது துர்ப்பாக்கியமான நிலையாகும்.

"ஆங்கில மொழியில் பேசுவதும், எழுதுவதும் நம் தேசிய உணர்ச்சிக்குக் கேடு விளைவிக்கும் — என்கிற தாழ்வு மனப்பான்மையையும் நாம் வளர்த்துவிட்டிருக்கிறோம்.

"இன்றைய கல்லூரி மாணவர்களுக்குச் சரியான முறையில் ஆங்கிலம் தெரியவில்லை. ஆங்கில மொழியைப் புறக்கணித்து வருவதன் காரணமாகவே, கல்வியின் தரமும் குறைந்துவிட்டிருக்கிறது.

"அவசரப்பட்டு ஆங்கிலத்தை அகற்றிவிட எண்ணுவது குறுகிய மனப்போக்கையும், மொழி வெறியையும் தூண்டவே வழிகோலும்.

"இந்தியை வைத்துக்கொண்டு, ஆங்கிலத்தை ஒழித்துவிடலாம் என்று கருதுவது அழிவு சக்தியைத் தாமே தேடிக்கொள்வதற்கோப்பாகும்; அலாவுதீன் கில்ஜி இந்த நாட்டை வெற்றிகொள்ள உதவிய அந்தச் சூழ்நிலையை இந்தியாவில் வலுவில் உருவாக்குவதாகும்"

பதுக்கல் - விலை உயர்வு - மக்கள் படும் அவதி

இறக்குமதிக் கொள்கைக் குழப்பத்தின் விளைவு

கல்கத்தா, அக். 2—

மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் சில பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்தியப் பேரரசு விதித்த திடீர் தடையின் காரணமாக ஏற்கனவே அந்தப் பொருள்களைக் கைவசம் வைத்துள்ள வியாபாரிகள் பதுக்கலில் ஈடுபட்டு விட்டனராம். சில பொருள்களின் விலை திடீரென்று உயர்ந்துள்ளதாம்.

சவர பிளேடு விலை உயர்ந்துவிட்டிருப்பினும், மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டு, அதனை வாங்குவதற்கு அலைந்து திரிகின்றனராம்!

விலைகளைக் கட்டுப்படுத்தாமலும், வியாபாரிகள் கொள்ளை அடிப்பதற்கான வழிகளைத் தடுக்காமலும் இந்தியப் பேரரசு அவசரப்பட்டுச் செய்த இந்தக் காரியம் ஆளவந்தார்களுக்கு உள்ள திறமையின் அவலட்சணத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

எண்ணிக்கை பெரிதல்லவாம்!

புதுடில்லி, அக். 3—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஜபல்பூர் பல்கலைக்கழகம் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. 8,000 மாணவர்கள் கல்லூரிப் படிப்பு பயிலும் 17 புதிய கல்லூரிகள் இதில் அடங்கியுள்ளன. அந்தப் பல்கலைக் கழகத்தின் துவக்க விழாவுக்குப் பண்டித நேரு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"பல்கலைக் கழகத்தின் 'தரம்' குறைந்துவிட்டது என்று அடிக்கடி நாட்டில் குற்றம் சாட்டப்படுகிறது; இந்தக் காலத்தில் எண்ணிக்கையைப் பெரிதாகப் பொருட்படுத்துவதற்கில்லை; 'தரம்'தான் முக்கியமாகும்."

சென்னை, விசாகப்பட்டினம் துறைமுகங்களுக்கு கடன்

புதுடில்லி, அக். 3—

இந்தியத் துறைமுக அபிவிருத்தித் திட்டங்களுக்காகக் கடன் கொடுப்பது பற்றி ஆராய உலகப் பாங்கியின் சார்பில் தூதுவர்கள் வருகின்றனராம்.

வடக்கில் பம்பாய், கல்கத்தா துறைமுகங்களையும், தெற்கில் சென்னை, விசாகப்பட்டினம் துறைமுகங்களை மட்டும் அவர்கள் பார்வையிடுவார்களாம். அதற்குப் பிறகு, எந்தத்துறை முகங்களுக்குக் கடன் தருவது என்று அவர்கள் முடிவு செய்வார்களாம்.

'படித்த உடனே வேலை வேண்டும்'

மருத்துவ மாணவர்கள் கோரிக்கை

நாகர், அக். 3—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் புதிதாகத் துவக்கப்பட்ட $3\frac{1}{2}$ ஆண்டுக் கிராம மருத்துவப் படிப்புப் பயிலும் மாணவர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

படிப்பு முடிந்த உடனே, 'டாக்டர்கள்' என்று பதிவு செய்து, அரசாங்கம் உடனடியாக வேலை தேடித்தர வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தித் திணிப்பு அழிவையே தேடித் தரும்'

தாழ்த்தப்பட்டோர் தலைவர் சிவராஜ் கருத்து

நாகபுரி, அக். —2

"ஆங்கிலக் கல்வி போதனையை நிறுத்திவிட்டு இந்தியைத் திணிப்பதானது, நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், இதர பின் தள்ளப்பட்ட வகுப்பினருக்கும் பெரும் தீங்கு பயப்பதாகும்—அழிவைத் தேடித் தருவதாகும்"

என, அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், மக்கள்சபை உறுப்பினருமான என். சிவராஜ் இங்கு கருத்தறிவித்திருக்கிறார்.

அகில இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப்பு, மற்றும் புத்தமத மாணவர்கள் மாநாட்டினைத் துவக்கிவைத்துப் பேசுகையில், அவர், தென்னாட்டு மக்களும் வங்காளிகளும் இந்தி புகுத்தப்படுவதை எதிர்க்கின்றனர் என்றும், இன்றைய உலகில், வளர்ந்த ஒரு நவீன காலமொழி என்ற வகையில், ஆங்கிலம் அனைவராலும் கற்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

மற்றும், புத்தமதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்டோருக்கு, கல்விச் சலுகைகளை இல்லை என்று கூறுவது கூடாது எனவும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

லோகியா சத்தியாக்கிரகம் செய்வார்?

கைதான கட்சித் தொண்டர்களை விடுவிக்கக் கோரி!

நாகபுரி, அக். 1—

உ. பி. மாநிலத்தில் சோஷலிஸ்டுக் கட்சியினர் நடத்திய கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட தொண்டர்களை ஒரு மாத காலத்திற்குள் சர்க்கார் விடுவிக்காவிட்டால் தான் தனிப்பட்ட முறையில் இலட்சுமணபுரியில் 'சத்தியாக்கிரகத்தில் ஈடுபடப் போவதாக டாக்டர் ராம் மனோகர் லோகியா அறிவித்திருக்கிறாராம்!

கட்சியின் கோரிக்கைகளை ஓரளவேனும் மத்திய சர்க்காரும் ஏற்றுக்கொண்டுவிட்டனர் என்றும், அதனால் கட்சி, 'சத்தியாக்கிரக' கிளர்ச்சியை நிறுத்திவிட்டது என்றும், எனவே, கைதாகியுள்ள சுமார் 3,000 தொண்டர்களையும் விடுவிக்க வேண்டியது மாநில சர்க்காரின் பொறுப்பு என்றும் கட்சித் தலைவரான சாக்சேனா கூறியிருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் நெல், ராகி விளைச்சல்

சென்னை, செப். 30—

1957 ஆகஸ்ட் 31-ம் நாளுடன் முடிந்த இரண்டு வாரங்களில் சென்னை மாநிலத்தில் நெல் விளைச்சல் நிலவரம்:—தென்னாற்காடு, சேலம், வடஆற்காடு, கோவை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நெல் சாகுபடி பரப்பளவு அதிகம் இல்லை. தென்னாற்காடு, சேலம், ஆகிய மாவட்டங்களில் விளைச்சல் சாதாரணமாக இருந்தது; இதர மாவட்டங்களில் நிலைமை சுமார்.

ராகி விளைச்சல் நிலவரம்:—சேலம், வடாற்காடு, திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் ராகி சாகுபடி பரப்பளவு அதிகமில்லை. திருச்சி மாவட்டத்தில் விரிவான நிலப்பரப்பில் ராகி சாகுபடியாயிற்று; சேலத்தில் விளைச்சல் சாதாரணமாக இருந்தது; இதர மாவட்டங்களில் சுமார்.

கலைவாணர் மறைவு: நாடெங்கிலும் கண்ணீர் வெள்ளம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மறைந்த செய்தி கேட்டதும் நாட்டின் பல பகுதிகளிலும், கடல்கடந்த நாடுகளான இலங்கை, பர்மா முதலியவிடங்களிலும் உள்ள தி. மு. க. கிளைகளும், கழகச் சார்பு மன்றங்களும் கொடியைத் தாழ்த்திப் பறக்கவிட்டும், மௌன ஊர்வலம் நடத்தியும், இரங்கற் கூட்டங்கள் நடத்தியும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளன. மற்றும், கட்சி சார்பற்ற மன்றங்களும், பல்வேறு கொள்கைகளைக்கொண்ட அமைப்புக்களும் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன.

இத்துணை மன்றங்களும், அமைப்புகளும் அனுப்பி வைத்திருக்கும் அனுதாபச் செய்திகளை முழுதும் வெளியிட இடமின்மையால், கழக—மன்றங்களின் பெயர்களையும், ஊர்களையும் மட்டும் இங்கு தருகிறோம்.—(ஆ-ர்.)

தி. மு. க. கிளை-தனுஷ்கோடி; தி. மு. க. மாணவர்; கிளை-பெரம்பூர், சென்னை; கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றம்-சென்னை; 16-வது வட்டத் தி. மு. க. கிளை-சென்னை; ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்-சென்னை; தி. மு. க. கொழும்பு கிளை-இலங்கை; பல்கலை அரங்கம் - திருவட்டீசுவரன் பேட்டை; மீனாட்சிபுரம் தி.மு.க. கிளை-நாகர்கோவில்; தி. மு. க. கிளை-கும்மிடிப்பூண்டி; முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்-கோவை; 14-வது வட்ட தி மு. க. கிளை-சென்னை; தி. மு. க. கிளை-சாமியார்பட்டி; பிள்ளை பார்பாளையம் தி. மு. க. கிளை - காஞ்சீபுரம்; தி. மு. க. கிளை-காமாட்சிபுரம்; தி.மு.க. கிளை-திருவில்லிபுத்தூர்; தி. மு. க. கிளை-மூசிறி; வள்ளுவர் படிப்பகம் - காரைக்குடி; என். எஸ். கே. இசைக்கலை மன்றம்-ஜோதிபுரம்; கே. வி. கே. சாமி நினைவு படிப்பகம்-ஆவாரம்பட்டி; தி. மு. க. கிளை-கொத்தமங்கலம்; மக்கள் பணி மன்றம்-சென்னை 16-வது வட்டம்; வள்ளக்கடவு தி. மு. க. கிளை-திருவனந்தபுரம்; தி. மு. க. கிளை-முத்தியம்பாளையம்; தி. மு. க. கிளை-மேலவரகுணாராயபுரம்; தி. மு. க. கிளை-செங்கமேடு; கே. வி. கே. சாமி பாசறை - பூசாரிப்பட்டி; அண்ணா பகுத்தறிவு மன்றம்-கொழும்பு; தி. மு. க. கிளை-அக்கரமலை; தி. மு. க. கிளை-சங்கரபாண்டியபுரம்; கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்-புதுக்கோட்டை; அண்ணா மன்றம்-விருதுநகர்; அறிவகம்-கடையநல்லூர்பேட்டை; தி. மு க. கிளை-மேட்டூர் அணை; தி. மு க. கிளை-சென்னை 1-வது வட்டம்; யாழ்ப்பாணம் தி. மு. க. கிளை-இலங்கை; தி. மு. க. கிளை-திருச்செங்கோடு; தி. மு. க. கிளை-உறையூர்; தி. மு. க. கிளை-ராப்ராய், (நீலகிரி); நகர தி. மு க. கிளை-திருச்சி; டாக்டர் அம்பேத்கார் நினைவு மன்றம்-சேத்துப்பட்டு, சென்னை; அழகிரி படிப்பகம்-சென்னை-5; கண்டி தி. மு. க. கிளை-இலங்கை; சிதம்பரம் வட்ட தி. மு. க. கிளை-சிதம்பரம்; தி. மு. க. கிளை-சேதுபாவாசத்திரம்; தி. மு. க. கிளை-பாளையம்பட்டி; தி. மு. க. கிளை-குணசீலம்; தி. மு. க. கிளை-சிக்கல்; தி. மு. க. கிளை-காஞ்சிறங்குடி; புத்தர் படிப்பகம்-கண்ணனூர்; தி. மு. க. கிளை-அப்பர்பாளையம் எஸ்டேட்; தி. மு. க. கிளை-தளவாய்புரம்; தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம்-மதுரை; முத்தமிழ் மன்றம்-அயன்புரம்; திரு. வி. க. நூல் நிலயம்-சென்னை-17; தி. மு. கழகக் கிளை-முடச்சிக்காடு; தி. மு. கழகக் கிளை - நாகூர்; தி. மு. க. கிளை—கீழக்கரை; தி. மு. க. கிளை—உதயமார்த்தாண்டபுரம்; புளுமண்டல் தி.மு. க. கிளை—இலங்கை; வள்ளுவர் இளைஞர் மன்றம்—கலைவாணர் நாடக மன்றம்—சத்திரம் கருப்பூர்; இளம் எழுத்தாளர் சங்கம்—அரக்கோணம்; சூளை நகர இளைஞர் கழகம்—சென்னை; பிளாக்பள்ளி தி. மு. க. கிளை—பெங்களூர்; தி. மு. க. கிளை—பந்தநல்லூர்; தி. மு. க. கிளை—கடையம்பட்டி; தி. மு. க. கிளை—காடையாம்பட்டி; தி.மு.க. கிளை—அம்மையப்பன்; தி. மு. க. கிளை—நடுப்பட்டி; மடத்துவாசல் தி. மு. க. கிளை-நாகர் கோவில்; தி. மு. க. கிளை-திருமங்கலம்; சர்வகட்சி கூட்டணி - மேலூர்; இசை வேளாளர் முன்னேற்ற சங்கம்—திருவாரூர்; நகர தி. மு. கிளை—தமிழ் மன்றம் வாணியம்பாடி; கரந்தை தி. மு. க. கிளை-தஞ்சை; தி. மு. க. கிளை-குலசேகரன்பட்டினம்; தி. மு. க. கிளை-செங்காட்டுப்பட்டி; தி.மு.க. கிளை-கொத்தபாளையம்; தி. மு. க. கிளை-மணப்பாறை; சர்வகட்சிப் பொதுக் கூட்டம்-விருத்தாசலம்; சர்வகட்சிப் பொதுக் கூட்டம் - காரைக்குடி; தி. மு. கழகம்—தமிழரசுக் கழகம்-காடுப்பட்டி; தாராவி தி. மு. க. கிளை-பம்பாய்; தேவேந்திர வேளாளர் சங்கம்-பம்பாய்; தி. மு. க. கிளை-பெண்ணாடம்; தி. மு. க. கிளை-முத்துப்பேட்டை; மணவழகர் மன்றம்-சென்னை; தி. மு. க. கிளை-மேலக்கற்கண்டார் கோட்டை; நகர தி. மு. க. கிளை-கரூர்; திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்-பொராளை; பசவன்குடி பகுத்தறிவு மன்றம்-பெங்களூர்; பன்னீர்செல்வம் படிப்பகம்-சென்னை 6; சர்வகட்சிக் கூட்டம்-கடலூர்; 13, 14-வது வட்ட தி. மு. க. கிளை-திருப்பூர்; தி. மு. க. கிளை-பண்ணுருட்டி; நகர தி. மு. க. கிளை-மதுரை; சொற்பயிற்சி மன்றம்-பம்பாய்; தி. மு. க. கிளை—பரமக்குடி; தி. மு. க. கிளை-உடுமலை; தி. மு. க. கிளை-துறையூர்; கரந்தைப் புலவர் கல்லூரி-தஞ்சை; தி. மு. க. கிளை-நல்லமுடி; தி. மு. க. கிளை-திருவில்லிபுத்தூர்; தி. மு. க. கிளை-கள்ளக்குறிச்சி; தி. மு. க. கிளை-கன்னங்குறிச்சி; தி. மு. க. கிளை - கொடைக்கானல்; தி. மு. க. கிளை - குன்னத்தூர்; முத்தமிழ் நாடக மன்றம்-மலாடு, பம்பாய்; மறுமலர்ச்சி நூல் நிலயம் - சென்னை-2; கோட்டை தி.மு.க. கிளை-கோவை; தி.மு.க. கிளை-சின்னமனூர்; சர்வ கட்சிக் கமிட்டி-சூலூர்; இளைஞர் கழகம்-செம்பியன்மாதேவி; இராணுவத் தோழர்கள் 50 பேர்-சாகர்; தி. மு. க. கிளை-பனமரத்துபட்டி; திருவள்ளுவர் மன்றம்-மேல்பாடி; அறிவு வளர்ச்சி மன்றம்-கோடம்பாக்கம்; மக்கள் முற்போக்கு மன்றம்-வேளாளத் தேனாம்பேட்டை; தி. மு. க. கிளை-கோவிலடி; சீராமபுரம் தி. மு. க. கிளை-பெங்களூர்; தி. மு. க. கிளை-மல்லிபக்கரை; விசுவநாததாஸ் நினைவு மன்றம்-சென்னை; தமிழர் அறிவகம் - இராமபட்டணம்; நகர தி. மு. க. கிளை - புதுச்சேரி; தி.மு.க. கிளை-தாரமங்கலம்; அர்ச்சுனன் மன்றம்-சமீன் ஊத்துக்குழி; கலைவாணர் சொற்பயிற்சி மன்றம் - அமமாப்பேட்டை(சேலம்); தி. மு. க. கிளை-வள்ளூர்; தி. மு. க. கிளை-இணங்கனூர்; முத்தமிழ் மன்றம்-மதுரை; தமிழ் வளர்ச்சி மன்றம்-திண்டுக்கல்; கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்-அய்யனுபுரம், (மதுரை); தமிழர் மறுமலர்ச்சி நாடகக் கழகம்-வண்ணக்குடி; இளைஞர் இலக்கிய மன்றம்-கெண்டேபாளையம்; திருவள்ளுவர் கலா மன்றம்-பம்பாய்; மக்கள் மறுமலர்ச்சி மன்றம்-குடியேற்றம்; கே. வி. கே. சாமி மன்றம்-துறையூர்; அகில இந்திய தந்திப் போக்குவரத்து 4-ந் தர ஊழியர் சங்கம்-சென்னை; கலைக் கழகம்—சங்கீத நாடக அகாடமி-கும்பகோணம்; அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம்-கொழும்பு; தி.மு. க. கிளை-கருமலை; தி. மு. க. கிளை-திருத்தங்கல்; நிறைமதி நாடக மன்றம்-பரமணி; தி.மு.க. கிளை-சக்கம்பட்டி; நெல்லை ஆதி திராவிட மகாஜன சங்கம்-இலங்கை; முத்தமிழ் நாடக மன்றம்-கொழும்பு; புதுப்பாக்கம் வட்ட தி. மு. க. கிளை-சென்னை; பர்மா தி. மு. கழகம்-இரங்கூன்; கலைவாணர் நாடக மன்றம்-சங்கரன் கோவில்; தி. மு. க. கிளை -சூலூர்; நகர தி. மு. க. கிளை—வால்பாறை; தி. மு. க. கிளை-காட்டுமன்னார்குடி; தி. மு. க. கிளை-வரல்; 39-வது வட்ட தி. மு. க. கிளை-சென்னை; தி. மு. க. கிளை-திருப்பனந்தாள்; புதுமலர்ச்சி படிப்பகம்-கோவை; நகைச்சுவை அரசர் என். எஸ். கே. படிப்பகம்-திருவாதவூர்; திரு. வி. க. பகுத்தறிவு மன்றம்-மயிலாப்பூர்; தி. மு. க. கிளை-கீரனூர்; இளங்கோ நாடகமன்றம் -திருப்பூர்; தி. மு. க. கிளை-சேதுக்குவாய்த்தான்; தி. மு. க. கிளை-பழைய நெல்லூர்; தி. மு. க. கிளை-கம்பம்; நகர தி. மு. க. கிளை-பழனி; பழைய மாணவர் கழகம்-செயங்கொண்ட சோழபுரம்; தி. மு. க. கிளை-தங்கமாபுரி பட்டணம்; தி. மு. க. கிளை-சேவூர்; தி. மு. க. கிளை-கவர்க்கல் எஸ்டேட்; நகர தி. மு. க. கிளை-குடந்தை; 44-வது வட்ட தி. மு. க. கிளை-சென்னை; நகர தி. மு. க. கிளை—சீரங்கம் 25-வது வட்ட தி. மு. க. கிளை-கோவை; என். எஸ். கே. படிப்பக மன்றம்-திருவாதவூர்; முத்துநகர் கே. வி. கே. சாமி படிப்பகம்-திருப்பூர்; நகர தி. மு. க. கிளை-சாத்தான்குளம்; தி. மு. க. கிளை. பிள்ளாதுறை; அண்ணா படிப்பகம்-ஆத்தூர்; நாவலர் சொற்பயிற்சி மன்றம்-காளி; நகர தி.மு. க. கிளை-உதகமண்டலம்; தி. மு. க. கிளை-எத்தாப்பூர்; கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பகம்-மதுரை; தி. மு. க. கிளை-அம்மன்புரம்; தி. மு. க. கிளை-சமயபுரம்; இலட்சுமிநாராயணபுரம் தி. மு க. கிளை-பெங்களூர்; தி. மு. க கிளை-வைத்தம்பாறை; தி. மு. க. கிளை-மல்ம்பட்டி; தி. மு. க. கிளை-தமிழரசுக் கழகம்; முற்போக்கு வாலிபர் சங்கம்-வுந்தம்பட்டி; 11-வது வட்ட தி. மு. க. கிளை-சென்னை; தி. மு. க. கிளை-கதிராமங்கலம்; தி. மு. க. கிளை-தச்சநல்லூர்; தி. மு. க. கிளை-களங்காணி; தி. மு. க. அனுதாபிகள்-சேலம் 14.வது வட்டம்; தி. மு.க. கிளை-முல்லைவாடி; தி.மு க, கிளை-செயங்கொண்ட சோழபுரம்; குமாவேல் நினைவு மன்றம்-திருக்கோகர்ணம்; நாடகக் கலைக் கழகம் - அருப்புக்கோட்டை; மாணிக்கா தொடக்கப்பள்ளி மாணவர் மன்றம்-பழனி; தி.மு.க. கிளை-ஒண்டிப்புதூர்; தி. மு. க. கிளை-சோழவந்தான்; நகர மன்றம்-திருவள்ளூர்; கலை மன்றம்-சென்னை, சேப்பாக்கம்; தி. மு. க. கிளை - உத்தமபாளையம்; பாரதி இரவுப் பள்ளி-உதகை; தி. மு. க. கிளை-தளவாய்ப்பட்டணம்; சர்வ கட்சியினர்-தாராபுரம்; தி. மு. க. கிளை-தென்காசி; தி.மு.க. கிளை-செல்வபுரம்; தி. மு. க. கிளை-இலுப்பூர்; 25, 26, 27-வது வட்ட தி. மு. க. கிளை-திருப்பூர்; சர்வ கட்சியினர் - திருப்பரங்குன்றம்; பாண்டியன் படிப்பகம்-முதலிப்பட்டி; தி. மு. க. கிளை-கடமங்குடி; தி. மு. க. கிளை-அ. கொல்லப்பட்டி; தி. மு. க. கிளை-உத்தப்புரம்; வள்ளுவர் படிப்பகம்—16, 17-வது வட்ட தி. மு. கழகம்-திருப்பூர்; தி. மு கழகக் கிளை-மாரண்ட அள்ளி; தி. மு. க. கிளை - நாச்சியார்; கோவில்; அழகிரி நாடக மன்றம் -திருப்பூர்; அறிவொளி மன்றம்-சிதம்பரம்; அண்ணா அறிவகம்-நெல்லை; தி. மு. க. கிளை - புதுப்பாளையம்; அண்ணா படிப்பகம்-விக்கிரமங்கலம்; தி. மு. க. கிளை-வீரவநல்லூர்; இளங்கோவடிகள் நூலகம் காடாம்பாடி; தி. மு. க. கிளை, 2-சிதம்பரம்; தி. மு. க. கிளைகள்-புதுவை வட்டம்; 40-வது வட்ட தி. மு. க. கிளை-சென்னை; சொற்பயிற்சி மன்றம்-புதுப்பாளையம்; சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்-குமாரம்; தி. மு. க. கிளை-முதுகுளத்தூர்; தி மு. க. கிளை-பண்ணைக்காடு; கே. வி. கே. சாமி படிப்பகம்-தண்டையார்பேட்டை, சென்னை.

வருந்தி அழைக்கிறார் வல்லூறுகளை!

அமெரிக்காவில் டி. டி. கே. திருவாய்மொழி

நியூயார்க், அக். 1—

"தனிப்பட்டவர்கள் தொழில்களில் முதலீடுசெய்யும் வண்ணம் இந்தியா கவர்ச்சிகரமாக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புகிறேன்; அப்போதுதான், அமெரிக்கப் பாங்கிகள் பெருமளவு உதவ முடியும்"

என்று, இங்கு இந்தியாவின் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

தான், எண்ணற்ற பாங்கி முதலாளிகளையும் இதர லேவா தேவிக்காரர்களையும் சந்திக்கப் போவதாகவும், என்றாலும், உடனடியாக எதுவும் நிகழ்ந்துவிடும் என்று கூறுவதற்கு இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'நிரந்தர நீதிமன்றம் வேண்டும்'

திருவனந்தபுரம், அக். 3—

திருவனந்தபுரத்தில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள நீதிமன்றம், புதிய வழக்குகளை பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் பெற்ற நிரந்தர நீதிமன்றமாக்கப் படவேண்டும் என்று கோரி, காயம் குளத்தில் உள்ள மக்கள் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த தொழிலாளி துண்டதில் பச்சபிள்ளை, பழவகாடி அருகே உள்ள மாநில பஸ் போக்குவரத்து நிலயத்திற்கு அருகில் சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில்

அமைதி நிலவ வேண்டுகோள்

பரமக்குடி தி. மு. க. கிளை செயற்குழு முடிவுகள்

22—9—57 மாலை 4 மணிக்கு பரமக்குடி தி. மு. க. கிளையின் அவசரச் செயற்குழுக் கூட்டம் கழகச் செயலாளர் எம். ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன :—

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், சிவகெங்கை, ஆகிய வட்டங்களில் உள்ள சிற்றூர்களில் இரு வகுப்பார்களிடையே கலவரங்கள் மூண்டு கொலை — கொள்ளை — தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்று ஊரை விட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு இக்குழு துக்கமும், துயரமும் அடைகிறது.

இதுகாள்வரை நடைபெற்ற சம்பவத்தில் 40 பேர் மரணமடைந்ததைக் குறித்து இச்செயற்குழு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

அறவழி நின்று அமைதியை நிலைநாட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர் காமராசர் அவர்களும், மராமத்துத்துறை அமைச்சர் கக்கன் அவர்களும், முதுகுளத்தூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உ. முத்துராமலிங்கனார் அவர்களும் (மூவருமாய்) கலவரங்கள் நடக்கும் வட்டங்களுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கலவரம் மூண்டுள்ள பகுதிகளில் உள்ள தி. மு. கழகத் தோழர்களும், ஆதாவாளர்களும் ஆங்காங்குள்ள இருவகுப்புத் தலைவர்களையும் கண்டு பொதுச் செயலாளர் அறிக்கைக்கிணங்க அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளைச் செய்யும்படி இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 10/57

அக்டோபர் 13: இந்தி எதிர்ப்பு நாள்

நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, **1957** அக்டோபர்—**13**, ஞாயிற்றுக் கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளாக'க் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும், திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் ஒருபடியை இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில், கண்ணியத்தோடும்—கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

30—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி-13-வது வட்டம்:
டவுன் ஹால் திடலில்
6—10—57 மாலே 6 மணிக்கு
தலேவர் : தூ. மா. வா. மலே
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம். குழந்தைவேல்
டி. பி. அழகமுத்து
எம். பி. முத்துக்கருப்பன்
எம். எஸ். மணி

★

செங்கற்பட்டு :
தர்க்கா திடலில்
6—10—57 மாலே 5 மணிக்கு
தலேவர் : வை. இரங்கநாதன்
பேசுவோர் :
அண்ணா
ப. உ. சண்முகம்
ஜே. ஏ. வகாப்
சோ. க. சுந்தரேசன்
இன்னிசை :
டேப்-இராதாமாணிக்கம்

★

மணக்கால் :
(அரியலூர் வட்டம்)
தி. மு. கழகத் துவக்கவிழா
5—10—57 மாலே 5 மணிக்கு
தலேவர் : எம். முத்து
பேசுவோர் :
கே. ஏ. மதியழகன்
கோ. சிவபெருமாள்
ஏ. மருதமுத்து
என். குழந்தைவேல்
எம். ஆர். மணி
கே. எம். சிங்காரம்
எம். ஏ. வடிவேல்
ஏ. வேலு

★

சேலம்—6-வது வட்டம்:
செவ்வாய்ப்பேட்டை
லாங்லி ரோடில்
6—10—57மாலே 6-30மணிக்கு
பேசுவோர் :
கி. மனோகரன்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

சேலம்—17-வது வட்டம்:
பரமக்குடி நன்னுசாமி
ஐயர் தெருவில்
6—10—57 இரவு 8½ மணிக்கு
பேசுவோர் :
கி. மனோகரன்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

ஆத்தூர் (சேலம்):
சந்தைப்பேட்டை திடலில்
5—10—57 இரவு 7 மணிக்கு
தலேவர் : கே. முத்து
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம்.பி.சுப்பிரமணியம்எம்.எல்.ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

பொள்ளாச்சி :
மார்க்கெட் ரோடு
வள்ளுவர் திடலில்
6—10—57 இரவு 7½ மணிக்கு
பேசுவோர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
பி. என். இராமாநுசம்

★

சிக்கல்நாயக்கன்பேட்டை
பெருமாள் கோவில் அருகில்
6—10—57 மாலே 5 மணிக்கு
தலேவர் : பி. ஏ. லிங்கன்
பேசுவோர் :
ஆறுமுகம்
ம. கோ. மணி
கு. இராசமாணிக்கம்
கோ. சி. மணி
பொ. தருமன்
து. சேரலாதன்
மாரிமுத்து

படித்த உடனே வேலே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கை அடங்கிய விளம்பர அட்டைகளுடன் அவர்கள் ஊர்வலமாகச் சென்று, தீர்மானம் நிறைவேற்றி, அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளனர்.

அண்ணா தரும் விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற ஒரு வாய்ப்பு அமைச்சருக்குஇருக்கின்றது; மற்றொன்று, கடைசியாகப் பேசுகின்றவர் அவர், முதலிலே பேசுகின்றவர்கள் நாங்கள்; நாங்கள் எது பேசினாலும், கடைசியிலே அவர் பதிலளிக்கலாம்; அவர் அளிக்கின்ற பதிலிலே இருக்கின்ற கோளாறுகளை நாங்கள் எடுத்துக்காட்ட முடியாது. ஏனென்றால், அவர் பேசியான பிறகு சபை கலேந்து விடும்.

"இப்படி, சிவனுடைய ஜடாபாரத்திலே இருக்கிறபாம்பு, 'கருடா சௌக்கியமா?' என்று கேட்டால், நீங்கள் அதனுடைய—கடவுளுடைய சுத்திரத்தைப் புரிந்துகொள்ளாமல், 'அப்படியா? அப்படியா?' என்று கேட்டால் என்ன பொருள்? அந்தப் பாம்பு, ஜடாபாரத்திலே ஏறுவதற்கு முன்னாலே எங்கேயிருந்தது? இந்தக் கருடன் சட்டசபைக்குப் போவதற்கு முன்னாலே வட்டமிடாத இடம் இல்லே. இந்த இரண்டையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்து, இந்தப் பிரச்சினேயைக் கடைசி தடவையாக ஆராய்ந்து தீர்க்கவேண்டும்; அதிலேயிருந்து தான் சுப்பிரமணியமும் தெரிந்து கொள்ளவேண்டும்.

"சுப்பிரமணியத்தினுடைய உண்மையான எண்ணம் அதுவா என்றால், உண்மையான எண்ணம் அது அல்ல. நாங்கள் சரியாகப் பேசவில்லே என்பதல்ல அவருடைய உண்மையான எண்ணம். அவருடைய சரக்கு விற்பதற்கு அவர் அதைச் சொல்லுகிறார்.

"இடுப்பிலேயிருந்து கணுக்கால் வரையிலே கூந்தல் வளரும் தைலம் என்றால், கூந்தல் வளர்ந்ததென்று பொருள்? அந்த பாட்டில் விற்பனேயாகவில்லே! அதைப்போல், தன்னுடைய தோழர்களேச் சந்திக்கிறபொழுது 'அண்ணாதுரை கூட்டத்தார் பலமான எதிர்க்கட்சி' என்று அமைச்சர் சொல்லுவார்? 'அது ஒன்றும் பிரயோசனம் இல்லே' என்று தான் அவர் சொல்லவேண்டும்.

"சொல்லுகிறவர் யார்? சொன்ன இடம் எது? எந்தநேரத்திலே சொன்னார்? சொல்லுவதற்கு அவருக்கிருக்கின்ற உரிமை என்ன, தகுதி என்ன?—இதைப் பார்த்து நீங்கள் அதை ஆராய வேண்டுமே தவிர, 'சொன்னாரே—இருக்குமோ?'—என்று எண்ணுவதல்ல? 'இருக்குமோ?'—என்றால் என்ன பொருள்? பூசாரி நம்முடைய வீட்டுக்கு வந்தால்—வீட்டிலே நம்முடைய தாட்க்கு ஏதாவது காய்ச்சல் என்றால், அதை டைபாயிட் சுரம் என்று அவன் சொல்லுவான்? 'பேய் பிடித்திருக்கும்போல் இருக்கிறதே' என்றுதான் சொல்லுவான்; காரணமென்ன? டைபாயிட் சுரமென்று தெரிந்தால் வைத்தியரிடத்திலே போவார்கள்; பேய் பிடித்திருக்கிறது என்றுசொன்னால் தம்மிடத்திலே அழைத்துக்கொண்டுவருவார்கள்' என்பது அவனுக்குத் தெரியும்—தொழிலும் கிடைக்கும். அதைப்போல, நிதியமைச்சர் சுப்பிரமணியம், தன்னுடைய தொழில் தன்மையிலே அப்படிப் பேசினாரே தவிர, வேறொன்றுமல்ல!

"அமைச்சர்கள் நேரடியாக எங்களிடத்திலே பழகுகின்ற நேரத்திலேயும், தனிப்பட்ட முறையிலேயும், அவரவர் சொந்தக் கருத்திலேயும் எங்களேப்பற்றி மட்டமாகவோ — தாழ்வாகவோ வைத்துக்கொண்டில்லே; எங்களிடத்திலே தனிப்பட்டமுறையிலே பாசத்தைக் காட்டுகின்றார்கள் என்பதை அரசியல் நாகரிகம் காரணமாக நான் எடுத்துச் சொல்லாமல் இருக்கின்றேன்; நான் எடுத்துச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்தை அமைச்சர்கள் உண்டாக்குவார்களானல்—இவைகளெல்லாம் அவர்களுக்கு ஆபத்தளிக்காத உண்மைகள்—அவர்களுக்கு ஆபத்தளிக்கக்கூடிய உண்மையான விஷயங்கள் என்னிடத்திலே பல அமைச்சர்கள் பேசியிருக்கின்றார்கள்—அவைகளும் அம்பலத்துக்குவரும் என்று மாத்திரம் அமைச்சர்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். சட்டமன்றத்திலே தி. மு. கழகம் நல்லபடி நடக்கின்றதா இல்லேயா என்பதை இந்த அளவிலே நான் நிறுத்திக்கொள்ளுகின்றேன்."

இந்தியாவுக்குக் கடன் உதவி

ஜப்பான் திட்டம்

டோக்கியோ, அக். 3—
இந்தியாவுக்கு ஏதாவது கடன் உதவி தருவது பற்றி ஜப்பான் சர்க்கார் யோசித்துவருவதாக உயர்தர அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர்.

டெல்லி சர்க்காரின் வேண்டுகோளின்பேரில் தயாரிக்கப்பட்டுள்ள கடன் தருவதற்கான திட்டம், பண்டித நேரு இங்கு வரும்போது அவருடன் விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

சுமார் 3 கோடி அமெரிக்க டாலருக்கும், ரூ. 15 கோடி இந்திய நாணயத்திற்கும் சமமான 1,080 கோடி 'யென்' கடனாக வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் அடுத்துவரும் 5 ஆண்டுகளில் இக்கடன் திருப்பித்தரப் படவேண்டும்.

மின்சாரம், உருக்கு போன்ற முக்கிய தொழில்களுக்கான உதவியும் ஜப்பானில் பெறப்படுமாம்.

காஞ்சி நகரசபை உயர்நிலேப் பள்ளி

காமராசர் திறந்துவைப்பார்

காஞ்சீபுரம், அக். 3—
காஞ்சிபுரம் நகர சபையினர் சேக்குப்பேட்டை திடலில் கட்டிவரும் உயர்நிலேப் பள்ளிக் கட்டிடத்தை சென்னே முதலமைச்சர் காமராசரைக்கொண்டு திறக்க வேண்டும் என்று திரு. பெருமாள் (நாயுடு) தலேமையில் கூடிய காஞ்சீபுரம் நகரசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தாராநல்லூர் தி.மு.க. கிளே கட்டிடத் திறப்பு விழா

6—10—57 காலே 9 மணிக்கு திருச்சி-தாராநல்லூர் செக்கடித் தெருவில் தாராநல்லூர் (24-வது வட்டம்) தி. மு. க. கிளேயின் கட்டிடத்தை தோழர் எஸ். நெடுமாறன் திறந்துவைப்பார். தோழர் எம். எஸ். மணி தலேமை வகிப்பார். வட்டத்தின் முக்கிய இடங்களில் தோழர் எம். எஸ். மணி அவர்களால் கழகக் கொடியேற்றுவிக்கப்படும்.

சென்னே - ஆயிரம்விளக்கு சிந்தனேயாளர் கழகம்

5—10—57 மாலே 6 மணிக்கு, மேற்படி கழகப் பணிமனேயில், தோழர் மு. சாமிநாதன் தலேமையில், 'உலக சிந்தனேயாளர்கள்' என்ற பொதுத் தலேப்பின்கீழ் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; தோழர் எஸ். எஸ். தென்னரசு 'காந்திக்குப் பெரியவன்' என்ற தலேப்பிலும், தோழர் தி. சு. கிள்ளிவளவன் 'எம். என். இராயும—பகுத்தறிவு இயக்கமும்' என்ற தலேப்பிலும் சொற்பொழிவாற்றுவர்.

கோவை அழகிரி நினேவு படிப்பகப் பொதுக்கூட்டம்

6—10—57 மாலே 6 மணிக்கு கோவை 29-வது வட்டாரம் அழகிரி நினேவுப் படிப்பகத்தில் தோழர் பி. சமதர்மம் அவர்கள் தலேமையில் மேற்படி பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சே. அ. இராசமாணிக்கம், மு. இராமநாதன் மற்றும் பலர் பேசுவர்.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
6 : பிற்பகல்—வில்லிவலம்
மாலே—செங்கற்பட்டு
7 : சென்னே
12 : காவேரிப்பட்டினம் (நாடகத் தலேமை)
13 : கோவை
14 : ஆனேமலே (வே. புதூர்)
15 : கோபிசெட்டிப்பாளேயம்
16 : சென்னிமலே
22 : நீர்வளூர் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா
26 : மயிலே நபிகள் நாயகம் விழா

க. அன்பழகன்

எம். எல். ஏ., சுற்றுப்பயணம்

அக்.
5 : இரவு—மதுரை (தபால் தந்தி ஊழியர் சங்க நாடகத் தலேமை)
6 : மாலே—பொள்ளாச்சி
7 : மாலே—வேலாயுதபாளேயம் (திருச்சி மாவட்டம்)
8 : சாங்கேயம்
9 : ஈரோடு
10 : சென்னே நகர பஸ் தொழிலாளர் கூட்டம்
11 : சென்னே முத்தியாலுப் பேட்டை உயர்நிலேப்பள்ளிக் கூட்டம்
12 : சிவகாசி
13 : தூத்துக்குடி
காலே—சிறப்புக் கூட்டம்
மாலே—பொதுக்கூட்டம்

கி. மனோகரன்

சுற்றுப்பயணம்

அக். 6 : சேலம்
7 : புவனகிரி
8 : பூசாரிப்பட்டி
9 : பாலக்கோடு
11 : சென்னே
13 : நாகர்கோவில்

சென்னே 44-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு :

5—10—57 இரவு 9 மணிக்கு, சென்னே-மயிலே (44-வது வட்ட) தி. மு. க. கிளேயின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனேயில் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினேகள் ஆய்வுக்கு வரும்.

கோவில்பட்டியில் இன்னிசை விருந்து

6—10—57 இரவு 8 மணியளவில் கோவில்பட்டி அரி. அ. சு. துரைசாமி நாடார் காம்பவுண்டில் அமைந்திருக்கும் மின்னொளி அரங்கில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., அவர்கள் தலேமையில் (நகர தி. மு. க. நிதிக்காக) ஓர் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும். நாகூர்-அனிபா தம் குழுவினருடன் இன்னிசை வழங்குவார்.

சாத்தான்குளம் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

6—10—57 மாலே 6 மணிக்கு, சாத்தான்குளம் வி. எஸ். திடலில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. ஏசுதாஸ், எஸ். என். இராசன், இரா. நல்வினேவேல், சேர்மத்துரை ஆகியோர் பேசுவர்.

காரைக்குடி இளங்கோ சொற்பயிற்சி மன்ற ஆண்டுவிழா

6—10—57 மாலே 5 மணிக்கு, காரைக்குடி, நா. புதூர் இளங்கோ படிப்பகத்தில் தோழர் எம். பரமேசுவரன் தலேமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் இளமுருகுபொற்செல்வி சொற்பொழிவாற்றுவார்.

நக்கீரர் பட்டி மன்றம்

5-10-57 மாலே 6-30 மணிக்கு, சென்னே-பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றத்தில் நக்கீரர்பட்டி மன்றக் கூட்டம் தோழர் ஏ. எஸ். வேணு தலேமையில் நடைபெறும். தோழர்கள் சிறுவை மோகனசுந்தரம், க. கிருட்டினமூர்த்தி ஆகியோர், 'இந்தி பொதுமொழியாகத் தகுதியுண்டா?' என்பதுபற்றிப் பேசுவர்.

சாமி அருணகிரிநாதர் மணிவிழா

*

(முதல் நாள் நிகழ்ச்சி)

5—10—57 மாலே 3-30 மணிக்கு, சென்னே—திருவொற்றியூர் நெடுஞ்சாலே, 200-எண்ணுள்ள சாது நாராயணதேசிகர் நிலேயத்தில் திரு. குக. சதாசிவ அடிகளார் தலேமையில் சுவாமி அருணகிரிநாத அடிகளாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெறும். இசை: திரு. புண்ணியகோடி; வரவேற்புரை: திரு. மி. பொன். இராமநாதன்; நூல் வெளியீடு : திரு. வைத்தியலிங்கம்பிள்ளே; பாராட்டுரை வழங்குவோர்: முத்தானந்த அடிகள், சித. சங்கத்துநாராயண சாமிகள், திரு. பிரகாசானந்த அடிகள், திரு. தி. முனிசாமி நாயகர், திருமதி சரோஜினி அம்மையார்.

புள்ளம்பாடி பிர்க்கா தி. மு. கழகக் கிளேகளுக்கு

6—10—57 காலே 9 மணிக்கு, கல்லக்குடி தி. மு. க. கிளே அலுவலகத்தில் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறவிருப்பதால், மேற்படி பிர்க்காவைச சேர்ந்த கிளேக் கழகங்களின் செயலாளர்கள், பிரதிநிதிகள் தவருது கலந்துகொள்ளும்படி கல்லக்குடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. தம்புசாமி கேட்டுக்கொள்கிருர்.

புதுக்கோட்டை தி. மு. க. மாணவர் கிளே 4-வது ஆண்டுவிழா

6—10—57 காலே 9 மணிக்கு, நகர் மன்றத்தில் (டவுன் ஹால்) தோழர் எம். எஸ். மணி அவர்கள் தலேமையில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி., "எதிர்காலம்...?" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார். மற்றும் தோழர்கள் அசோகன், தே. ப. இராசாகிருட்டினன் ஆகியோரும் பேசுவர்.

கே. வி. கே. சாமி நினேவு நாள் பொதுக்கூட்டம்

5—10—57 மாலே 6 மணிக்கு சென்னே-சைதாப்பேட்டை குளக்கரைத் தெருவில் தோழர் ஏ.எஸ். ஜேசுபாதம் தலேமையில் கே. வி. கே. சாமி நினேவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், டி. வி. நாராயணசாமி, சைதை-சம்பந்தம், பி. அன்னுமலே, மற்றும் பலர் பேசுவர்.

கீழமணக்குடி தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு :

6—10—57 இரவு 9 மணிக்கு கழகப் பணிமனேயில் மேற்படி செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினேகள் ஆய்வுக்குவரும்.

மறைமலேயடிகள் விழா

5—10—57 மாலே 6½ மணிக்கு சென்னே-சூளே, நகர இளேஞர் கழகத்தில் (10, மாணிக்க செட்டித் தெரு) தோழர் ஆடலரசு தலேமையில் மறைமலேயடிகள் விழா நடைபெறும்.

சென்னே-சூளே தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு :

5—10—57 இரவு 8 மணிக்கு சென்னே-சூளே (17-வது வட்டம்) தி. மு. க. கிளேயின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனேயில் நடைபெறும். கழக வரவு-செலவு, இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடுதல் ஆகியவைபற்றி ஆராயப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னே) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.